செ.வெ.எண் : 19 நாள் : 08.06.2020

# தூத்துக்குடி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் பேருந்து பயண அட்டை புதுப்பிக்காமல் ஆகஸ்ட் 2020 வரை பயன்படுத்தி கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தூத்துக்குடி மாவட்டத்தில் 2020-2021-ம் நிதியாண்டிற்கு மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் அரசு போக்குவரத்து கழக இலவச பயண அட்டையினை புதுப்பிக்க மாற்றுத்திறனாளிகள் அனைவரும் மொத்தமாக வருவதன் காரணமாக கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் அரசு போக்குவரத்து கழக இலவச பயண அட்டையினை ஆகஸ்ட் 2020 வரை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்குமாறு அரசு போக்குவரத்து கழகத்தில் தூத்துக்குடி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மார்ச் 31ல் முடிவடைந்துள்ள பேருந்து பயண அட்டையினை தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் முடிய பயன்படுத்துவதற்கு நடப்பில் வழங்க வேண்டும் எனவும், தூத்துக்குடி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் பேருந்து பயண அட்டை புதுப்பிக்காமல் ஆகஸ்ட் 2020 வரை பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் அரசு போக்குவரத்து கழக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆகஸ்ட் 2020 மாதத்திற்கு பின்னர் 2020-2021ம் ஆண்டிற்கு புதிய பயண அட்டை கோரும் மாற்றுத்திறனாளிகளுக்கு புதுப்பித்து வழங்கப்படும் என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம். தூத்துக்குடி